ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2138/36 - 2019 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2019.08.30

2138/36 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் ............ இலக்க ஊவா மாகாண சபையின் வீதி (திருத்தப்பட்ட) நிதியச்சட்ட வரைவு நகல்*

ஊவா மாகாணத்தின், மாகாண சபையில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட நிதியச் சட்ட வரைவு நகல் பொதுமக்களின் கருத்துக்களை கேட்பதற்காக இவ்வாறு வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிப்பு அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 நாட்கள் சென்ற பின்னர் இந்த வரைவு நகல் ஒப்புதலுக்காக ஊவா மாகாணத்தின், மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஏதாவது கருத்துக்களை சமர்ப்பிக்க எதிர்பார்த்தால் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 14 நாட்களுக்குள் அந்தக் கருத்துக்களை எழுத்து மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எனக்கு அறிவிக்க வேண்டும்.

அகலன் செந்தில் தொண்டமான்,
வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல்,
தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கூட்டுறவு
மற்றும் தமிழ் கல்வி அமைச்சர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை,
வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல்,
தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கூட்டுறவு
மற்றும் தமிழ் கல்வி அமைச்சு,
ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை,
2019, ஓகத்து 21.

1A - PG 4632— 20 (2019/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஊவா மாகாண மாகாண சபை**

*2019 ஆம் ஆண்டின் ..... இலக்க, ஊவா மாகாண சபையின் வீதி (திருத்தப்பட்ட) நியதிச்சட்டம்*

*2010 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, ஊவா மாகாண சபை வீதி அபிவிருத்தி நியதிச்சட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்காக அமுல்படுத்தப்படும் நியதிச்சட்டம்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு அமுல்படுத்தப்படுகிறது.

*சுருக்க பெயர் மற்றும் நடைமுறைப் படுத்தப்படும் திகதி.*

1. இந்த நியதிச்சட்டம் ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் ... ஆம் இலக்க, ஊவா மாகாண சபை வீதி (திருத்தப்பட்ட) நியதிச்சட்டம் என அடையாளம் காணப்படுவதுடன் வேறு விதமாக குறிப்பிடப்படவில்லை எனில் அது ஊவா மாகாண ஆளுநர் மூலம் அனுமதி அளிக்கப்பட்ட திகதி முதல் அல்லது தீர்மானிக்கப்பட்ட திகதியிலிருந்து அனைத்துப் பணிகளுக்கும் அமுலாக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் 3 ஆவது பிரிவை திருத்தம் செய்தல்.*

2. (இதன் பின்னர் ''பிரதான நியதிச்சட்டம்'' என அறியப்படும்) 2010 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, ஊவா மாகாண சபை வீதி நியதிச்சட்டத்தின் 3 ஆவது பிரிவை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உப பிரிவு உள்ளடக்கப்படுவதுடன் அது பிரதான நியதிச்சட்டத்தின் 3 ஆவது உப பிரிவாக அமுலாக்கப்பட வேண்டும்.

*மாகாண சபைக்குச் சொந்தமான வீதியாகப் பிரகடனப்படுத்தல்.*

3. (1) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும் விதிமுறைகள் மூலம் (இதன் பின்னர் ''அமைச்சர்'' என அறியப்படும்) ஊவா மாகாண சபையின் வீதிகள் விடய பொறுப்பான அமைச்சரினால் 6 ஆவது பிரிவின் 6 ஆவது உப பிரிவின் அதிகாரங்களுக்கு அமைவாக ஏதாவது ஒரு வீதியை ஊவா மாகாண சபைக்கு சொந்தமான வீதி என அறிவிக்க முடியும். அத்தகைய வீதிகள் அனைத்தும் ''சீ'' அல்லது ''டி'' அல்லது ''ஆர்'' வகுப்பு வீதிகள் என தரப்படுத்தப்படும். அதேபோல் பிரதான நியதிச்சட்டத்தில் ''ஊ'' என அடையாளம் காணப்பட்ட அனைத்து வீதிகளும் இதன் பின்னர் ''ஆர்'' வகுப்பு வீதிகள் என அடையாளம் காணப்பட வேண்டும்.

(2) மாகாண வீதிகளை தரப்படுத்தும் நியமங்கள் அமைச்சரின் உத்தரவு மூலம் அமுலாக்கப்படலாம்.

*பிரதான நியதிச் சட்டத்தின் 26 ஆவது பிரிவை திருத்தம் செய்தல்.*

3. பிரதான நியதிச்சட்டத்தின் 26 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) உப பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் உப பிரிவு உள்ளடக்கப்படுவதுடன், அது பிரதான நியதிச்சட்டத்தின் 26 (ஐ) இன் கீழ் (அ) மற்றும் (ஆ) என அமுலாக்கப்பட வேண்டும்.

1. அப்பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் உப பிரிவை சேர்த்தல் :-

*கட்டடங்கள் அமைப்பதற்கான வரம்பு மற்றும் எடை வரம்பு.*

(1) (அ) மாகாண வீதியாக வீதி அமைச்சரினால் அறிவிக்கப்பட்ட வீதி தொடர்பாக கருத்தில் கொள்ளும் போது அந்த வீதியின் மத்திய கோட்டில் இருந்து வீதியின் இரு பக்கங்களிலும், மாகாண வீதிப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் தூரத்தில் கட்டுமானங்களை அமைக்கும் வரம்பு, அதே போன்று பொருட்கள், மனிதர்கள் மற்றும் விலங்குகள் உள்ளடங்கலாக ஏற்றப்படும் மொத்த எடையுடன் வாகனத்தின் எடை வரம்பு மாகாண வீதிப் பணிப்பாளரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் ;

(ஆ) மேற்குறிப்பிட்ட (அ) பந்தியின் மூலம் வரையறுக்கப்பட்ட வரம்புகள் ஒரு வீதிக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு அல்லது பகுதிகளுக்கு வெவ்வேறாக வரையறுக்கப்பட வேண்டும்.

*2.* பிரதான நியதிச்சட்டத்தின் 26(4) ஆவது உப பிரிவை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உட்பிரிவு உள்ளடக்கப்படுவதுடன், அது பிரதான நியதிச்சட்டத்தின் 26(4) ஆவது உப பிரிவாக அமுலாக்கப்பட வேண்டும்.

(4) மேற்குறிப்பிட்ட (1) ஆவது உப பிரிவில் வரையறுக்கப்பட்ட வரம்புகள் ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பிரதான பொறியியலாளர்கள் இருவர் அடங்கலாக மாகாண வீதிப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட குழு மூலமாக பெற்றுக் கொள்ளப்படும் சிபாரிசுகளை கவனத்தில் கொண்டதன் பின்னர் மாகாண வீதிப் பணிப்பாளரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலமாக திருத்தம் செய்யப்பட வேண்டும்.

*3.* பிரதான நியதிச்சட்டத்தின் 26(6) ஆவது உப பிரிவை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உட்பிரிவை உள்ளடக்கப்படுவதுடன் அது பிரதான நியதிச்சட்டத்தின் 26(6) ஆவது உப பிரிவாக அமுலாக்கப்பட வேண்டும்.

(6) மாகாண வீதியாக வீதி அமைச்சரினால் அறிவிக்கப்பட்ட வீதியில் பயன்படுத்தப்படும் வாகனம் தொடர்பாக அந்த வாகனத்தில் இருக்கக்கூடிய அதிகபட்ச நீளம், அகலம் மற்றும் உயரம் மாகாண வீதிப் பணிப்பாளரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வரையறுக்கப்பட வேண்டும்.

*4.* பிரதான நியதிச்சட்டத்தின் 26(7) ஆவது உப பிரிவை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உட்பிரிவு உள்ளடக்கப்படுவதுடன், அது பிரதான நியதிச்சட்டத்தின் 26(7) ஆவது உப பிரிவாக அமுலாக்கப்பட வேண்டும்.

(7) இந்த பிரிவின் கீழ் மாகாண வீதிப் பணிப்பாளரினால் வரையறுக்கப்படும் எடை வரம்பு, வாகனத்தின் நீளம், அகலம் மற்றும் உயர வரம்புகள் பிரதேச பொறியியலாளர் மூலம் குறிப்பிட்ட வீதிகளில் ஆங்காங்கே எளிதில் பார்க்கக் கூடிய வகையில் காட்சிப்படுத்துவது முறையானதாகும்.

*4.* இந்தப் நியதிச்சட்டத்தின் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படும் போது சிங்கள மொழிச் சொற்றொடர்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

முரண்பாடுகள் ஏற்படும் போது சிங்கள மொழிச் சொற்றொடர்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

*09- 411*